# நலமிக்க நீண்ட ஆயுளுக்கான முதல் மருத்துவ நிலையம்

ஒருவரின் உடலுக்கு ஆகியுள்ள வயதைக் கணக்கிட்டு, பின்னர் அவர் மெதுவாக மூப்படையவும் புற்றுநோய், இதயநோய் போன்றவற்றைத் தடுக்கவும் உதவி செய்ய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று திறக்கப்பட்ட தேசிய பல்கலைக்கழக சுகாதார அமைப்பின் நலமிக்க நீண்ட ஆயுளுக்கான நிலையம் அத்தகைய ஆய்வுகளைச் செய்து வருகிறது. ரத்த அணுக்களின்வழி உடல் மூப்பைக் கணக்கிடும் புதிய அளவீட்டு முறைகளை அது உருவாக்கி வருகிறது.

மேலும், மூப்படைதலை மெதுவடையச் செய்யும் வழிகள் நிலையத்தில் ஆராயப்பட்டு வருகின்றன. ஆய்வுக்கூடச் சோதனைகளுக்குப் பின்னர் படிப்படியாக மனிதர்கள் மீதான சோதனைகளை நடத்தி நடைமுறைக்கு கொண்டுவர அது திட்டமிடுகிறது.

இதற்கான தேவையும் உள்ளது. வரும் 2030ஆம் ஆண்டுக்குள் நான்கில் ஒரு சிங்கப்பூரர் 65 வயதுக்கு மேற்பட்ட முதியவராக இருப்பார் என்றும் தமது வாழ்நாளின் கடைசி பத்தாண்டுகளை அவர் மோசமான உடல்நிலையுடன் கழிப்பார் என்றும் கூறப்பட்டுள்ளது.

நேற்றைய திறப்பு விழாவில் துணைப் பிரதமரும் பொருளியல் கொள்கைகளை ஒருங்கிணைக்கும் அமைச்சருமான திரு ஹெங் சுவீ கியட் கலந்துகொண்டார்.

தற்போதைய போக்கு தொடர்ந்தால் வசதியான நாடுகளில் 100 ஆண்டு ஆயுள் வழக்கமாகிவிடலாம் என்று அவர் கூறினார். நீண்ட ஆயுளில் நலம், கூடுதல் வாழ்நாள் நோயும் செலவுகளும் நிறைந்த சாபமாக இல்லாமல் வரமாக இருக்க உதவும் என்றார் அவர்.

தென்கிழக்காசிய மக்களுள் மூப்படைதலை மெதுவடையச் செய்யும் பல வழிகள் பரிசோதிக்கப்படும் என்று நிலையத்தின் இணை இயக்குநர் பேராசிரியர் பிரையன் கென்னடி கூறினார்.

ஒருவரின் ரத்த அழுத்தம், ரத்தத்தில் சர்க்கரை அளவு ஆகியவற்றை சோதித்து அவர் உடல்நலம் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் ஒருவரது உடலின் வயதைத் தீர்மானித்தால் அவரது உடல்நலத்தைப் பற்றி கூடுதல் விவரங்கள் கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

நலமிக்க நீண்ட ஆயுளுக்கான நிலையத்தின் ஆய்வுக்கூடம், தேசிய பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியில் இருக்கும். அதன் பகுதியாக புதிய மருந்தகம் அமைக்கப்படும். நலமிக்க நீண்ட ஆயுளுக்காக சிங்கப்பூரில் அரசாங்கச் செலவில் அமைக்கப்படும் முதல் வெளிநோயாளி மருந்தகம் அது. மருந்தகம் அடுத்த ஆண்டு திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நலமிக்க ஒருவரின் உடலின் வயதைக் கணக்கிட்டு, அவர் மெதுவாக மூப்படைய உதவ அவருக்கு ஏற்ற சிறப்புத் திட்டத்தை மருத்துவர்கள் உருவாக்குவர்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.